

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள்

# முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் ஆலோசனை





# சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 13-5-2025 செவ்வாய்க்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்

SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் சித்திரை 30 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 துல்கதா 14

மாநிலம் பயனுற!

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, மே 13, 2025 ● வெளியூர்: 14-5-2025, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 297 ● 8 பக்கம் ● ரூ.6

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு

# 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை

### கோவை மகளிர் கோர்ட்டு தீர்ப்பு



பொள்ளாச்சி, மே 13-

பொள்ளாச்சியில் நடந்த கூட்டு பாலியல் வழக்கு தமிழகத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய வழக்குகளில் ஒன்று. ஒரு கல்லூரி மாணவி மற்றும் பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்தப் பட்டனர். இதுதொடர்பான வீடியோ வெளியானதால் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் கடந்த 2019ம் ஆண்டு நடந்தது.

முதலில் இந்த வழக்கை பொள்ளாச்சி கிழக்கு போலீசார் விசாரித்தனர். பின்னர் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரித்த நிலையில் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்யப்பட்டது.

சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி விசாரணை மேற்கொண்டு திருநாவுக்கரசு (வயது 25), சபரிராஜன் (25), சதீஷ் (28), வசந்தகுமார் (27), மணிவண்ணன் (28), ஹெரன்பால் (29), பாபு (27), அருளானந்தம் (34) மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேரை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

இவர்கள் மீது 2019 மே 21ந் தேதி கோவை மகளிர் கோர்ட்டில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. அதன்பிறகு வழக்கு விசாரணை தாமதம் ஆனது. அதைத்தொடர்ந்து ஐகோர்ட்டு உத்தரவின் பேரில் கோவை ஒருங்கிணைந்த கோர்ட்டு வளாகத்தில் தனியாக அறை ஒதுக்கி விசாரணை தொடங்கப் பட்டது.

மகளிர் கோர்ட்டு நீதிபதி நந்தினிதேவி முன்னிலையில் கடந்த 2023 பிப்ரவரி 24ந் தேதி சாட்சி விசாரணை தொடங்கியது. அறைக்கதவுகள் மூடப்பட்டு ஆன்லைன் வாயிலாக சாட்சியம் பெறப்பட்டது. குற்றம்சாட்டப் பட்டவர்கள் காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டு வந்தனர். இந்த வழக்கில் சாட்சி விசாரணை, அரசு மற்றும் எதிர் தரப்பு இறுதிவாதம் முடிவடைந்தது. இதையடுத்து வழக்கின் தீர்ப்பு மே 13ந் தேதி அறிவிக்கப்படும் என நீதிபதி நந்தினி தேவி அறிவித்தார்.

அதன்படி இன்று தீர்ப்பு அளிக்கப்பட உள்ளதால் இந்த வழக்கில் கைதான 9 பேரும் நீதிபதி முன்பு நேரில் ஆஜர் படுத்தப்படுவதற்காக சேலம் சிறையில் இருந்து துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் இன்று காலை கோவை கோர்ட் டுக்கு அழைத்து வரப்பட்டார்கள். நீதிமன்ற வளாகம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தீர்ப்பளிக்க நீதிபதி நந்தினி தேவி நீதிமன்றத்திற்கு வந்தார். இதையடுத்து கைதான 9 பேரும் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தப் பட்டனர்.பாதிக்கப்பட்டோரின் விவரங் கள் வெளியாகாத வகையில் மகளிர் கோர்ட் அறைக்கதவுகள் அனைத்தும் மூடப்பட்டன. சிபிஐ அதிகாரிகள், குற்றம் சாட்டப்பட்டோர், வழக்கு தொடர்புடையோருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது.

நீதிபதி நந்தினி தேவி அளித்த தீர்ப்பில், பொள்ளாச்சி கூட்டு பாலியல் வழக்கில் கைது செய்யப் பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என்று அறிவித்தார்.

திருநாவுக்கரசு, சபரிராஜன், சதீஷ், வசந்தகுமார், மணிவண்ணன், ஹெரன்பால், பாபு, அருளானந்தம் மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் தண்டனை விவரங்கள் 12 மணிக்கு அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

9 நபர்களையும் சாகும் வரை சிறையில் அடைக்க வேண்டும் என தீர்ப்பளிக்குமாறு அரசு தரப்பில் முறையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டையே உலுக்கிய வழக்கில் 9 பேருக்கும் தரப்படும் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குற்றவாளிகள் 9 பேரின் தண்டனை விவரங்களை நீதிபதி நந்தினி தேவி வாசித்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

---

## நாடு முழுவதும்

# சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது

### 88.39 சதவீத மாணவர்கள் தேர்ச்சி



புதுடெல்லி, மே 13-

சிபிஎஸ்இ நாடு முழுவதும் சிபிஎஸ்இ 12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இணையத்தில் வெளியானது.

பிப்ரவரி 15ந்தேதி முதல் ஏப்ரல் 4ம் தேதி வரை நடைபெற்ற சிபிஎஸ்இ 12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் cbse.gov.in, cbseresults.nic.in, and results.cbse.nic ஆகிய இணையதளங்களில் வெளியாகி உள்ளது. 88.39 சதவீத மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டை விட தேர்ச்சி சதவீதம் 0.41 சதவீதம் அதிகரித்துள்ளது.

வழக்கத்தைபோல் மாணவர்களை விட மாணவிகளின் தேர்ச்சி 5 விகிதம் அதிகம். 91 சதவீதத்துக்கும் அதிகமான மாணவிகள் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

---

# அமைச்சர் சாமிநாதன் மருத்துவமனையில் அனுமதி



சென்னை, மே 13-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்திடீர் உடல்நலக்குறைவு காரணமாக அமைச்சர் சாமிநாதன் கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.மருத்துவமனையில் அமைச்சர் சாமிநாதனை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

---

# கூவாகம் கூத்தாண்டவர் கோவில் தேரோட்டம் நாளை நடக்கிறது

உளுந்தூர்பேட்டை, மே 13-

கூத்தாண்டவர் கோவில் தேரோட்டம் நாளை நடக்கிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் கூத்தாண்டவர் கோவில் உள்ளது.

புகழ் பெற்ற இக்கோவிலில் ஆண்டு தோறும் சித்திரை பெருந்திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். இதில் தமிழகம் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்கள், வெளி நாடுகளை சேர்ந்த திருநங்கைகள், திருநம்பிகள் பங்கேற்று கூத்தாண்டவரை வழிபடுவார்கள்.

அதன் படி இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த மாதம் 29ந் தேதி சாகை வார்த்தடன் தொடங்கியது. இதையொட்டி கூத்தாண்டவர் கோவில் முன் கூவாகம் கிராமத்தை சேர்ந்த பெண்கள் கூழ் வைத்து வழிபாடு நடத்தினார்கள்.

மேலும் சாகை வார்த்தலையொட்டி சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது. பாரத பிரசங்க முறை நிகழ்வுகள் கடந்த 8ந் தேதி வரை நடைபெற்றது. தினமும் இரவு 10 மணிக்கு உற்சவர் கூத்தாண்டவர் சுவாமி புறப்பாடு நடைபெற்றது.

சித்திரை பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வாக கூத்தாண்டவர் சுவாமிக்கு கண் திறத்தலும், அதனை தொடர்ந்து திருநங்கைள் அரவானை தங்களது கணவராக ஏற்றுக் கொண்டு திருமாங்கல்யம் ஏற்றுக் கொள்ளும் நிகழ்வும் மாலை நடைபெற உள்ளது.அப்போது கோவில் பூசாரிகளிடம் திருநங்கைகள், திருநம்பிகள் திருமாங்கல்யம் ஏற்றுக் கொண்டு கூத்தாண்டவருக்கு தேங்காய் உடைத்து வழிபடுவர்.கூவாகம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்ற திருமாங்கல்யம் ஏற்றுக் கொள்வார்கள்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நாளை (புதன்கிழமை) காலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது. திருமாங்கல்யம் ஏற்றுக் கொள்ளுதல், தேரோட்ட நிகழ்ச்சியில் திருநங்கைகள் அதிக அளவில் பங்கேற்பார்கள் என்பதால் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ரஜத் சதுர்வேதி உத்தரவின் பேரில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

---

# முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் ஆலோசனை



புதுடெல்லி, மே 13-

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து ஆபரேஷன் சிந்துரை இந்தியா நடத்தியது. இதனை தொடர்ந்து இந்திய எல்லை பகுதிகளில் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் நடத்தியது. இதற்கு இந்தியாவும் தக்க பதிலடி கொடுத்தது. இதனை தொடர்ந்து உலக நாடுகள் சண்டையை நிறுத்துவது தொடர்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தானை வலியுறுத்தி வந்தன.

அதன்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான மோதல் நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத தாக்குதலை எதிர்த்து நடத்திய தாக்குதல் நிறுத்தப்பட்ட நிலையில் இந்திய ராணுவப் படையினர் பாகிஸ்தானை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றன.

இந்த நிலையில் டெல்லியில் முப்படை தளபதிகளுடன் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார். ஆலோசனையில் முப்படைகளின் தலைமை தளபதி மற்றும் பாதுகாப்புத்துறை செயலாளரும் பங்கேற்றனர்.

பாகிஸ்தான் உடன் சண்டை நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போதைய நிலைமை குறித்து ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார்.

---

# மகளிர் உரிமைத் திட்டத்தில் ரூ.1000 கிடைக்காத பெண்கள் ஜூன் 4ந்தேதி விண்ணப்பிக்கலாம்



சென்னை, மே 13-

தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் 1 கோடியே 14 லட்சம் பெண்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்த திட்டத்தின் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 15ந்தேதி யன்று அவரவர் வங்கிக் கணக்கில் இந்த உரிமைத் தொகை வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தகுதி வாய்ந்த சில குடும்பத் தலைவிகள் இன்னும் இதில் இணையாமல் உள்ளனர்.

இதுவரை மூன்று கட்டமாக முகாம்கள் நடத்தப்பட்டு தகுதி வாய்ந்த பெண்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட நிலையில், தகுதி பெறாதவர்களை கண்டறிந்து அதில் சிலரை நீக்கமும் செய் துள்ளனர்.இந்த நிலையில் மாதம் ரூ.1000 கிடைக்காத பெண்கள், எங்களுக்கும் மாதம் ரூ.1000 வேண்டும் என்று அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களிடம் தொடர்ந்து முறையிட்டு வந்தனர்.

இதற்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஜூன் மாதம் 4ந்தேதி (அடுத்த மாதம்) மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதில் விடுபட்ட பெண்கள் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை கேட்டு விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப் பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு முழுவதும் 9 ஆயிரம் இடங்களில் முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக இத்திட்டத்தில் பணியாற்றிய தாசில்தார்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு சென்னையில் இன்று பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களுடன் முதல்வர் முகாம் எங்கெங்கு நடத்த வேண்டும் என்ற விவரங்களும் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகள் தற்போது குதூகலத்தில் உள்ளனர்.

ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கும் கீழ் வருமானம் ஈட்டும் குடும்பங்கள், ஆண்டிற்கு வீட்டு உபயோகத்திற்கு 3,600 யூனிட்டுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்கள், 5 ஏக்கருக்கு குறைவாக நன்செய் நிலம் அல்லது 10 ஏக்கருக்கு குறைவாக புன்செய் நிலம் வைத்துள்ள குடும்பங்கள் இத்திட்டத்தில் இணையலாம்.

அரசு ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட சிலர் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தகுதியில்லை.

சொந்த பயன்பாட்டுக்கு கார், ஜீப், டிராக்டர், கனரக வாகனம் உள்ளிட்ட 4 சக்கர வாகனங்கள் வைத்திருப்பவர்களும் இத்திட்டத்தில் பயன்பெற தகுதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• செவ்வாய் • மே 13, 2025

சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு

# கோரக்க நாதர் கோவிலில் குவிந்த கூட்டம்



**கடையம், மே 13–**

தென்காசி மாவட்டம் கடையம் அருகே கடனா அணை மேற்கு தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற அத்ரி என்ற கோரக்கநாதர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் பௌர்ணமி அமாவாசை மற்றும் சித்ரா பௌர்ணமி ஆகிய நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருவது வழக்கம். இந்த நிலையில் நேற்று சித்ரா பௌர்ணமி முன்னிட்டு சுவாமி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக தீபாராதனைகள் நடத்தப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து மலை அடிவாரப் பகுதியில் கோரக்க நாதர் டிரஸ்ட் தலைவர் ஜீவானந்தம், ஓர்க் ஷாப் துரை தலைமையில் நிர்வாகிகள் மாபெரும் அன்னதானம் வழங்கினர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சென்றது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு ஏற்பாடுகளை கடையம் வனச்சரகர் கருணாமூர்த்தி தலைமையிலான வனத்துறையினர் செய்திருந்தனர்.

# நாய் கடித்து இறந்த கால்நடைகளின் உரிமையாளருக்கு நிவாரணத்தொகை

## ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் வழங்கினார்



**கடலூர், மே 13–**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நாய் கடித்து இறந்த கால்நடைகளின் உரிமையாளருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கால்நடை நிவாரணத்தொகைக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் காட்டுமன்னார் கோயில் பகுதியில் நாய்கடித்து 10 வெள்ளாடுகள் இறந்துள்ளதுள்ளதை முன்னிட்டு, கால்நடைகளின் உரிமையாளர்களின் குடும்ப பொருளாதார சூழ்நிலையினை கருத்தில் கொண்டு உயிரிழந்த ஒரு வெள்ளாட்டிற்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ.6,000 வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்றையதினம் அழகுரோஜாவுக்கு உயிரிழந்த 2 வெள்ளாட்டிற்கு ரூ.12,000 நிவாரணத்தொகையும், செல்வராணிக்கு உயிரிழந்த 3 வெள்ளாட்டிற்கு ரூ.18,000 நிவாரணத்தொகையும், சுதாவுக்கு உயிரிழந்த 2 வெள்ளாட்டிற்கு ரூ.12,000 நிவாரணத்தொகையும், வெங்கடேசனுக்கு உயிரிழந்த 3 வெள்ளாட்டிற்கு ரூ.18,000 நிவாரணத்தொகையும் என மொத்தம் ரூ.60,000 மதிப்பீட்டில் கால்நடைகளுக்கான நிவாரணத்தொகை வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார். இந்நிகழ்ச் சியில் தனித் துணை ஆட்சியர் தங்கமணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# IPL 2025: Cricket Australia to back players if they choose to skip remainder of IPL season




**New Delhi, May 13-**

Following the Board of Control for Cricket in India (BCCI) update on Monday to restart the IPL 2025 season with a rejigged schedule after the tournament was indefinitely postponed last week due to the India-Pakistan conflicts, Cricket Australia (CA) has stated that they will back their players should they choose not to return for the remainder of the season.

With 17 matches to be played across 17 days starting Thursday, the BCCI announced that the final has been moved out to June 3 from the original schedule slated for a May 25 finish. This means that the Playoffs schedule will clash with a couple of international fixtures and leave the Australian and South African players featuring in the next stage of the season less than a week for preparation for the ICC World Test Championship, to be held at Lord's from June 11-15.

"Following the announcement that the IPL will resume on Saturday, Cricket Australia will support players in their individual decisions whether to return to India or not.

"Team management will work through the preparation implications for the World Test Championship Final for those players who choose to play in the remaining IPL matches. We are maintaining communication with the Australian Government and BCCI around security arrangements and safety," a CA spokesperson added.

Fifteen Australian players are currently spread across the 10 franchises in the tournament, five of whom are listed in Australia's WTC final squad unveiled on Tuesday.

While Test captain Pat Cummins and Travis Head are out of contention to feature in the Playoffs, the Sunrisers Hyderabad duo will have to deliberate about their return to feature in the remainder of the league-stage matches. However, Mitchell Starc, Josh Hazlewood and Josh Inglis are in the running to make the Playoffs with their respective sides while also being integral members of Australia's Test squad for the WTC summit clash.

Marcus Stonis, Mitchell Marsh, Mitchell Owen, Xavier Bartlett, Aaron Hardie, Nathan Ellis, Josh Inglis, Spencer Johnson, Tim David and Jake Fraser-McGurk are the Aussie players part of the ongoing edition.

# புதுவையில் நீட் அல்லாத படிப்புகளுக்கு விண்ணப்பம் விநியோகம் சென்டாக் குறிப்பேட்டை முதலமைச்சர் ரங்கசாமி வெளியிட்டார்



**புதுச்சேரி, மே 13–**

தமிழ்நாடு பாடத்திட்டத்தின்கீழ் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் கடந்த 8ம் தேதி வெளியானது.

புதுவை அரசு, தனியார் பள்ளிகளில் சி.பி.எஸ்.இ., மூலம் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வரும் 15ம் தேதிக்குள் முடிவுகள் வெளியாக உள்ளது. இந்த நிலையில், புதுச்சேரியில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள இடங்களில் சென்டாக் மூலம் மாணவர் சேர்க்கை நடந்து வருகிறது. இந்த ஆண்டுக்கான சென்டாக் விண்ணப்பம் ஆன்லைனில் நேற்று மாலை 3 மணி முதல் துவங்கியது.

இது குறித்த தகவல் குறிப்பேட்டை முதலமைச்சர் ரங்கசாமி நேற்று வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது, 2025–26ம் கல்வி ஆண்டுக்கான நீட் அல்லாத இளநிலை தொழிற்படிப்புகள், கலை அறிவியல், வணிகவியல், நுண்கலை படிப்புகளுக்கான சென்டாக் ஆன்லைன் விண்ணப்பம் www.centacpuducherry.in <http://www.centacpuducherry.in> என்ற இணையதளத்தில் இன்று (நேற்று) 12ம் தேதி மாலை 3 மணி முதல் துவங்கியது.

எனவே, நீட் அல்லாத இளநிலை படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம். குறிப்பாக நீட் அல்லாத யூ.ஜி., தொழில்முறை படிப்புகளாக பி.டெக்., பி.ஆர்க்., பி.எஸ்சி, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பி.வி.எஸ்சி., (கால்நடை மருத்துவம்), பி.எஸ்சி., நர்சிங்., பி.பி.டி., பி.எஸ்சி., துணை மருத்துவ டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், 6 அரசு மற்றும் அரசு உதவி பெறும் சொசைட்டி கல்லூரிகளில் உள்ள பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., பி.பி.ஏ., பி.சி.ஏ., உள்ளிட்ட இளநிலை கலை அறிவியல், வணிகவியல் படிப்புகளில் சேரவும் விண்ணப்பிக்கலாம். இதேபோல் பாரதியார் பல்கலைக் கூடத்தில் உள்ள பி.பி.ஏ., பி.வி.ஏ., உள்ளிட்ட நுண்கலை படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

இளநிலை நீட் அல்லாத தொழில் முறை மற்றும் கலை, அறிவியல், வணிகவியல் படிப்புகளுக்கும் பிற மாநில ஒதுக்கீடு உள்ளது. எனவே, தகுதியான பிற மாநில மாணவர்கள் இப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

என்.ஆர்.ஐ., மற்றும் என்.ஆர்.ஐ., ஸ்பான்சர்டு, ஓ.சி.ஐ., விண்ணப்பதாரர்களும் நீட் அல்லாத இளநிலை தொழில்முறை படிப்புகளில் சுய நிதி இடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக காமராஜர் அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் உள்ள பி.டெக்., மகளிர் இன்ஜினியரிங் கல்லூரி, புதுச்சேரி தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள ஜோஸா இடங்கள், பி.எஸ்.சி., வேளாண்மை தோட்டக்கலை, கால்நடை மருத்துவம், பி.எஸ்.சி., நர்சிங், பி.பி.டி., பி.எஸ்.சி., துணை மருத்துவ படிப்புகள், பி.பார்ம்., படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். நீட் அல்லாத தொழில்முறை படிப்புகளில் 6,257 இடங்கள், கலை அறிவியல், வணிகவியல் படிப்புகளில் 4,320 படிப்புகள் என மொத்தம் 10,577 படிப்புகள் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

நீட் அல்லாத படிப்புகளுக்கு விண்ணப்பிக்க கட்டணம் வெளியிடப்பட்டுள்ளது. தொழில்முறை டிகிரி, டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க எஸ்.சி., எஸ்.டி., மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.500, இதர பிரிவினருக்கு ரூ.1000, பிற மாநில மாணவர்களுக்கு ரூ.1,500 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கலை அறிவியல், வணிகவியல், நுண் கலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்க எஸ்.சி., எஸ்.டி., மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.150. இதர பிரிவினருக்கு ரூ.300, பிற மாநில மாணவர்களுக்கு ரூ.500 விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். தொழில்முறை டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு சேர்த்து விண்ணப்பிக்க எஸ்.சி., எஸ்.டி., மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.500, இதர பிரிவினருக்கு ரூ.1000, பிற மாநில மாணவர்களுக்கு ரூ.1,500 விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும். என்.ஆர்.ஐ., மற்றும் என்.ஆர்.ஐ., ஸ்பான்சர்டு, ஓ.சி.ஐ., மற்றும் ஓ.சி.ஐ., ஸ்பான்சர்டு பிரிவினர் விண்ணப்ப கட்டணம் ரூ.5,000 செலுத்த வேண்டும்.

# தமிழ்ச் சங்கத் தலைவர் வி.முத்துவுக்கு விருது



**புதுச்சேரி, மே 13–**

புதுச்சேரி வேதபுரம் நுண்கலை மன்றம் சார்பாக நடைபெற்ற முப்பெரும் விழாவில் புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து தமிழின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சமூகப் பணியில் தன்னை அர்ப்பணித்து வருகிறார். இவரின் தமிழ்ச் சேவையின் சிறப்பான பணிகளைப் பாராட்டி "சிறந்த தமிழ்வேந்தர்" என்னும் விருதினை, பொன்னாடை அணிவித்து, ராஜகிரீடம், சந்தனமாலை, வாழ்த்து மடல் மற்றும் நினைவுப் பரிசினை வழங்கி ராஜமரியாதையுடன் கௌரவித்து புதுவை வேதபுரம் நுண்கலை மன்றம் சார்பில் விருது வழங்கி பாராட்டினர்.

# சங்கரன்கோவில் அதிமுக முன்னாள் நகர செயலாளர் எஸ்டி சங்கரகுமார் இல்ல திருமண விழா



**தென்காசி, மே 13–**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் முன்னாள் நகர செயலாளரும் மாவட்ட அம்மா பேரவை செயலாளரும் சட்டமன்றத் தொகுதி செயலாளருமான எஸ்டி சங்கர குமார் மகன் நகர்மன்ற கவுன்சிலர் எஸ்டிஎஸ் சரவணகுமார், சுப்புலட்சுமி பி இ பேங்க் ஆப் இந்தியா உதவி மேலாளர் ஆனையூர் கிளை சிவகாசி இவர்களது திருமண விழா சங்கரன்கோவிலில் ஸ்ரீ சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருமண விழா முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆசியோடு தென்காசி அதிமுக மாவட்ட செயலாளர் கடையநல்லூர் எம்எல்ஏ கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா, முன்னாள் அமைச்சர் விஎம் ராஜலட்சுமி, தனலட்சுமி ஆயில் ரைஸ் மில் என்ஆர் உத்தண்டராமன், டாக்டர் டிகே செந்தில்குமார் டாக்டர் எம் சுதா அண்ணாமலை மருத்துவமனை சங்கரன்கோவில் ராஜ் சத்யன், அதிமுக தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் ஆகியோர் வாழ்த்துக்களோடு அதிமுக மாநில மாவட்ட ஒன்றிய நகர, கிளை, வார்டு பொறுப்பாளர்கள் மற்றும் கவுன்சிலர்கள், திமுக பிரமுகர்கள், பல்வேறு கட்சிகளை சேர்ந்த பிரமுகர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். எஸ்டி குருநாதன் நகர வர்த்தகர் சங்கம் எஸ்டி பழனியாச்சி, கவுன்சிலர் எஸ்டி சங்கரசுப்பிரமணியன், சீதாலெட்சுமி வி எம்எஸ்ஏஎஸ் லட்சுமி நாராயணன், எல் ஆவுடையம்மாள் எஸ்டி சண்முகம் என்ற குமார் வள்ளி, கவுன்சிலர் எஸ் டி சங்கரசுப்பிரமணியன், சீதாலெட்சுமி விஎம்எஸ்ஏஎஸ் லட்சுமி நாராயணன் எல் ஆவுடையம்மாள் எஸ்டி சண்முகம் என்ற குமார் வள்ளி, தகவல் தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாளர்கள் எஸ். சிவ ஆனந்த் சி.மதன் கொண்ட குழுவினர் வரவேற்றனர். சங்கரன் கோவில் அதிமுக நகர செயலாளர் வி. ஆறுமுகம் நன்றி கூறினார்.

# தையூர் தடுத்தாண்டீஸ்வரர் கோயிலில் தேர் திருவிழா



செஞ்சி, மே 13–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த தையூர் கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் ஸ்ரீ தையல்நாயகி உடனுறை தடுத்தாண்டீஸ்வரர் ஆலய 19 ஆம் ஆண்டு தேர் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

முன்னதாக கடந்த 10 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கிய திருவிழாவில் முதல் நாளில் 108 பசுக்களை கொண்டு கோ பூஜை நடைபெற்றது, அதனை தொடர்ந்து இரண்டாம் நாளில் 108 பெண்கள் சேர்ந்து பால்குட ஊர்வலம் நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று காலையில் பல்வேறு அபிஷேக பூஜைகள் நடைபெற்ற பின் சுவாமிக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது .அதனை தொடர்ந்து திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த தேரோட்ட நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் வெங்கடேசன், சத்தியவேல், தையூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தென்னரசு, இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் சங்கீதா, மகளிர் கூட்டமைப்பு நிர்வாகிகள், உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு திருத்தேரை வடம் பிடித்து இழுத்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றினார்கள்.

# திருவம்பட்டு ஊராட்சியில் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம்

## மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்



செஞ்சி, மே 13–

விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர் கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சிறப்பு முகாம் வல்லம் ஒன்றியம் திருவம்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட உதவி ஆணையர் ராஜ சேகரன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி எம்எல்ஏ மஸ்தான் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து திருவம்பட்டு, கப்பை ஆகிய ஊராட்சிகளில் சுற்றியுள்ள கிராமத்தில் இருந்து ஏராளமான கிராம பொதுமக்கள் தமிழ் நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரிய சிறப்பு முகாமில் உறுப்பினர் பதிவு செய்தல், உறுப்பினர் பதிவு புதுப்பித்தல் உதவித்தொகை, ஓய்வூதியம் ஆகிய திட்டங்களுக்கு ஏராளமானோர் கலந்துகொண்டு பதிவு செய்தனர். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம் வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர்கள்,ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# காரைக்காலில் அனைத்து ஒப்பந்ததாரர் சங்கம் ஆர்ப்பாட்டம்



காரைக்கால், மே 13–

காரைக்காலில் எம் சாண்ட் பி.சான்ட் ஜல்லி மணல் விலையை உடனடியாக குறைக்க வலியுறுத்தி, அகில இந்திய கட்டுநர் சங்கத்தினர் மற்றும் அனைத்து ஒப்பந்ததாரர் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காரைக்கால் மாவட்ட அகில இந்திய கட்டுநர் சங்கம், அனைத்து ஒப்பந்ததாரர் சங்கம் சார்பில் காரைக்கால் கடற்கரைச் சாலையில் நேற்று நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, இது சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் கணேஷ் தலைமை தாங்கினார் ஏராளமான நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் காரைக்கால் மாவட்டத்தில் நாளுக்கு நாள் கட்டுமானம் தொழில் ஆற்று மணல் இல்லாமல் சரிந்து வருவதால், ஆற்று மணல் குவாரிகளை காரைக்காலில் உடனடியாக திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தரமான கல் குவாரி பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்க அரசு முன்வர வேண்டும். அண்மைக்காலமாக கட்டுமான தொழிலையும் சீரழிக்கும் வகையில் நடந்து கொள்ளும் கல் குவாரி உரிமையாளர்கள், எம் சாண்ட் பி.சான்ட் ஜல்லி மணல் விலையை உடனடியாக குறைக்க முன்வர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

# தமிழ்நாடு அரசின் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சி



சேலம், மே 13–

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், மின்னாம்பள்ளி ஊராட்சி மன்றம் எதிரில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கப் புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இன்றைய தினம் சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், மின்னாம் பள்ளி ஊராட்சி மன்றம் எதிரில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறுபுகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரால் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள், சுற்றுலாத்துறை அமைச்சர், பல்வேறு துறை சார்ந்த அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

# பிளஸ்2 தேர்வில் வெற்றிபெற்ற மாணவனுக்கு ஊக்கத்தொகை



செஞ்சி, மே 13–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி ஊராட்சி, ரெட்டிப்பாளையம் கிராமத்தில் ஆதியன் சமூகத்தைச் சேர்ந்த மாரியப்பன் கன்னியம்மாள் மகன் மாணவர் வி. சரவணன், 2025ஆம் ஆண்டு நடைபெற்ற பிளஸ் 2 பொதுத் தேர்வில் 463/600 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றார்.

ஆலம்பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்றார். தேர்வில் வெற்றி பெற்று ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்தார். ஆலம்பூண்டி மிராக்கில் டிரஸ்ட் நிறுவனர் அம்புரோஸ் மாணவனுக்கு பாராட்டுச் சான்றிதழும், ஊக்கத்தொகையும் வழங்கி பாராட்டினார். அப்பொழுது மாணவன் கூறுகையில், மேலும், தனது உயர் கல்வியை முடித்த பின் காவல் துறையில் பணியாற்றும் கனவு உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# சங்கரன்கோவிலில் புதிய பேருந்து நிலையத்தை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்

தென்காசி, மே 13–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம், புளியங்குடியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தினசரி அங்காடி மற்றும் வாசுதேவநல்லூரில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் நேரு திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார்கள்.



நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கென பல்லாயிரம் கோடியில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். நகர உட்கட்டமைப்பு வசதிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில், பேருந்து நிலைய கட்டடம் பழுதடைந்து இருந்ததால் புதிய நவீன பேருந்து நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு மாற்றுவதற்கு ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய கட்டடம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. தற்போது பேருந்து நிலைய பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் 20 பேருந்துகள் நிறுத்துவதற்கு வசதிகளும், ஒரு உணவு விடுதி, தாய்மார்கள் பாலூட்டும், அறை, நேர காப்பாளர் அறை மற்றும் கட்டண கழிப்பறை ஒன்று மற்றும் 39 வணிக கடைகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 45,000 மக்கள் பயனடைவார்கள்.

தொடர்ந்து, புளியங்குடி நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ.4கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 74 கடைகள் கொண்ட காந்தி தினசரி அங்காடி கட்டிடம் இலவச ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 50,000 மக்கள் பயனடைவார்கள்.

மேலும், வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சங்கரன்கோவில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் விஜயலெட்சுமி, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் (கூ.பொ) நாகராஜன், புளியங்குடி நகர்மன்ற தலைவர் விஜயா சௌந்தர்ராஜன், புளியங்குடி நகரராட்சி ஆணையாளர் ஷாம் கிங்சன், வாசுதேவநல்லூர் பேரூராட்சி மன்ற தலைவர் லாவண்யா, வாசுதேவநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் பதுருனிஷா மற்றும் அரசுஅலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாலை எக்ஸ்பிரஸ்

# காரைக்கால் மாவட்ட நலவழித்துறைக்கு ரூ.30 லட்சம் மதிப்பில் 2 ஆம்புலன்ஸ்கள்

## கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்




**காரைக்கால், மே 13-**

காரைக்கால் தனியார் துறைமுகம் சி எஸ் ஆர் திட்டத்தின் கீழ், மாவட்ட நலவழித் துறைக்கு வழங்கிய, ரூ.30 லட்சம் மதிப்புள்ள 2 ஆம்புலன்ஸ்களை கலெக்டர் சோமசேகர் அப்பா ராவ் நேற்று மாலை கொடியசைத்து துவங்கி வைத்தார்.

காரைக்கால் மேலவாஞ்சூர் அருகே இயங்கும் தனியார் துறைமுகம் தனது சிஎஸ்ஆர் திட்டத்தின் கீழ் ரூபாய் 30 லட்சம் செலவில் இரண்டு ஆம்புலன்ஸ்களை காரைக்கால் மாவட்ட நலவழித்துறைக்கு நேற்று வழங்கியது. இந்நிகழ்ச்சி நேற்று மாவட்ட கலெக்டர் அலுவலக வாயிலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சோமு சேகர் அப்பாராவ் தலைமை தாங்கினார். இந்த ஆம்புலன்ஸ்கள் நிரவி மற்றும் அம்பகரத்தூர் தொலைதூர ஆரம்ப சுகாதார மையமான சேவை செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தனியார் துறைமுகத்தின் தலைமை இயக்க அதிகாரி கேப்டன் சச்சின் ஸ்ரீவஸ்தவா, நலவழிதுறையின் துணை இயக்குநர் டாக்டர் ஆர்.சிவராஜகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டையில் சித்திரை திருவிழா



**பதுக்கோட்டை, மே 13-**

புதுக்கோட்டை மாநகராட்சி 0வது வார்டு மாப்பிள்ளையார் நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ நாகத்தம்மாள் கோயிலில் சித்திரை திருவிழா நடந்தது. மேயர் திலகவதி செந்தில் கலந்துகொண்டு சிறப்பித்ததார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு, மாவட்ட காய்கறி வியாபாரிகள் சங்க செயலாளர் அழகு சீனிவாசன்,

வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ஆர் தனபால், வடக்கு மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கம்பன் நகர் ரமேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டை பதிவு செய்யும் முகாமை ஆட்சியர் ஆய்வு



**கன்னியாகுமரி, மே 13-**

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட குலசேகரபுரத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் பயனாளிகள் பதிவு செய்யும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா துவக்கி வைத்து தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மற்றும் 63 தனியார் மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சைகள், டயலஸிஸ், புற்றுநோய் சிகிச்சை, மாரடைப்பு சிகிச்சை, கர்ப்பப்பை கட்டிகள் தொடர்பான சிகிச்சை, விபத்து எலும்பு முறிவு சிகிச்சை உட்பட பல சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.1,20,000க்கு கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம். இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை மேற்கொள்ள முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டை அவசியம்.

அதனடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டை பதிவு செய்யும் முகாம் முதற்கட்டமாக குலசேகரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. முகாமானது நேற்று துவக்கி 24.06.2025 அன்று வரை அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ஆரம்பித்து அதன்பின் வருவாய் கிராம அளவில் முகாம்கள் நடத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் இந்த காப்பீடு அட்டைபெற ரேஷன்கார்டு நகல், வருமான சான்றிதழ், ஏதேனும் ஒரு குடும்ப உறுப்பினரின் ஆதார் நகல் உள்ளிட்டவைகளை முகாமிற்கு கொண்டு வரவேண்டும். பொதுமக்களுக்கு முகாம் நடைபெறும் இடங்கள் குறித்து விளம்பரத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டை இல்லாத தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே நடைபெறும் முகாமில் தங்கள் விவரங்களை பதிவு செய்து முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அடையாள அட்டை பெற கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் துணை இயக்குநர் குடும்ப நலத்துறை ரவிக்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், சுகாதாரத்துறை அலுவலர்கள், முதலமைச்சரின் காப்பீடு திட்ட அலுவலர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# மேம்பாலத்தில் விரிசல்: ஆய்வுக்குப் பின் பொதுப்பணித்துறை மூலம் சரிசெய்யும் பணிகள் துவக்கம்

## அமைச்சர் லட்சுமி நாராயணன் ஆய்வு



**புதுச்சேரி, மே 13-**

புதுச்சேரி போக்குவரத்து துறை அலுவலகம் எதிரில் உள்ள மேம்பாலத்தில் இரு பக்கமும் விரிசல்கள் ஏற்பட்டதால், மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற புகாரினைத் தொடர்ந்து முதலமைச்சர் ரங்கசாமியின், உத்தரவின் பேரில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் நேரில் சென்று ஆய்வு செய்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன் அடிப்படையில் சென்னையிலிருந்து நிபுணர்கள் குழு வரவழைக்கப்பட்டு மேம்பாலத்தில் ஏற்பட்ட விரிசலை ஆய்வு செய்து சரி செய்யும் வேலைகள் நடைபெற்றுகின்றன.

இந்நிலையில், நேற்று அப்பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# புதுவைக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும் முதலமைச்சர் ரங்கசாமி நம்பிக்கை

**புதுச்சேரி, மே 13-**

'நம்பிக்கை தான் வாழ்க்கை. அதே நம்பிக்கையில் தான் புதுவைக்கு மாநில அந்தஸ்து கோரி மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்' என, முதலமைச்சர் ரங்கசாமி கூறினார்.

புதுச்சேரி சட்டசபையில், சென்டாக் மாணவர் சேர்க்கை தகவல் கையெட்டை முதலமைச்சர் ரங்கசாமி, வெளியிட்ட பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி பொறுப்பேற்றது முதல் பல திட்டங்களை வரிசையாக அறிவித்து, ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகிறோம். அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் இந்த அரசு நிச்சயம் செயல்படுத்தும். அதன்படி, சமீபத்தில் அறிவித்த மீனவர்களுக்கான திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும். ரேஷன் கார்டிற்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் கோதுமையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

புதுச்சேரிக்கு வருகை தந்த மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, மரியாதை நிமித்தமாக என்னை சந்தித்தார். அப்போது, அவரிடம் மாநில அரசுக்கு நிதி, நிர்வாக விவகாரங்களில் மத்திய அரசின் உதவியை கோரினேன். என்.ஆர்., காங்கிரஸ் கட்சியின் கொள்கையான மாநில அந்தஸ்து விவகாரத்தை எங்கள் அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

இப்பொழுதும் வலியுறுத்தினேன். தொடர்ந்து வலியுறுத்துவோம். இது தொடர்பாக சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானம், மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். நம்பிக்கை தான் வாழ்க்கை. அதே



நம்பிக்கையில் தான் மாநில அந்தஸ்திற்கு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கிடைக்கும் என நம்புகிறேன். இவ்வாறு முதலமைச்சர் ரங்கசாமி கூறினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**கன்னியாகுமரி, மே 13-**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நலஉதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர்வசதி, சாலைவசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 335 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வுகாணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மாற்றுத்திறனாளி முன்னாள் படைவீரர்களுக்கு மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இரண்டு முன்னாள் படைவீரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சேக்அப்துல்காதர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர்ராஜன், துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் மேஜர் ஜெயகுமார், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி, மே 13-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார்.

மாவட்டமாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,500 வீதம் ரூ.54,000 மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 397 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட வழங்கல் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அனிதா, உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுப்புலெட்சுமி, துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்



நாமக்கல், மே 13-

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 385 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் உமாவிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்றுகொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, கூட்டுறவுத் துறை சார்பில் 4 பயனாணிகளுக்கு ரூ.7.85 லட்சம் சார்பில் பயிர்க்கடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 2 மாற்றுத்திறனாளிக்கு தலா ரூ.15,750 வீதம் ரூ.31,500 மதிப்பில் சக்கர நாற்காலிகள் மற்றும் 1 மாற்றுத்திறனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பிட்டு திட்ட அட்டை என மொத்தம் 7 பயனாளிகளுக்கு ரூ.8.17 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கடலூர், மே 13-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 654 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் குறைதீர்வு தினத்தில் பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் 8 பயனாளிகளுக்கு தலா ரூ.45,000 வீதம் மொத்தம் ரூ.3,60,000 மதிப்பீட்டிலான 2 சென்ட் அளவில் இலவச வீட்டு மனைப்பட்டாவிற்கான ஆணை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள்நல அலுவலர் ராஜீ, உதவி ஆணையர் (கலால்) சந்திரகுமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில், தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் மூலம் 631 பயனாளிகளுக்கு ரூ.12,57,450க்கான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் வழங்கினார்.

# மாற்றுத்திறனாளிக்கு வீல்சேர் வழங்கிய ஆட்சியர்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிக்கு வீல்சேரை வழங்கினார்கள்.

# தனியார் பள்ளி வாகனங்களை ஆட்சியர் ஆய்வு



வேலூர், மே 13-

வேலூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மூலம் ஆய்வு செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி காட்பாடி சன்பீம் பள்ளி மைதானத்தில் தொடங்கி வைத்து வாகனங்களை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது தனித்துணை ஆட்சியர் கலியமூர்த்தி உடனிருந்தார்.

# தொல்காப்பியர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**கன்னியாகுமரி, மே 13-**

தொல்காப்பியர், தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூலின் ஆசிரியர். இவர் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள காப்பிக்காட்டில் பிறந்தவர் என்று கூறப்படுகிறது. இவருடைய இயற்பெயர் திரணதூமாக்கினியார், சமதக்கினி முனிவரின் புதல்வர் என்றும் சிலர் கூறுகின்றனர். தொல்காப்பியர் வாழ்ந்த காலம் துல்லியமாகத் தெரியவில்லை. ஆனால் பதஞ்சலி முனிவர் (கி.மு. 200) காலத்தினும் முற்பட்டவர் என கருதுகின்றனர்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் தொல்காப்பியர் அறக்கட்டளையின் சார்பில், தொல்காப்பியர் 2736 வது பிறந்தநாளையொட்டி, பத்மநாபபுரம் சார்ஆட்சியர் வினய்குமார் மீனா காப்பிக்காடு பகுதியில் அமைந்துள்ள திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து பத்மநாபபுரம் சார்ஆட்சியர் வினய்குமார் மீனா, தொல்காப்பியர் குறித்து மாவட்ட அளவில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் புத்தகம் வழங்கி, பாராட்டினார்கள். மேலும் கவிஞர் தமிழ் குழவி மற்றும் முனைவர் ச. இலட்சுமனனுக்கு தொல்காப்பியர் அறக்கட்டளை விருது வழங்கி கௌரவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஜாண்ஜெகத்பிரைட், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (பொ) கனகலெட்சுமி, தொல்காப்பியர் அறக்கட்டளை தலைவர் பாஸ்கரன், முத்தமிழ் மன்ற தலைவர் தமிழ்ச்செம்மல் முளங்குழி பா.இலாசர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் சிந்துகுமார், புதுக்கடை முன்னாள் பேரூராட்சி தலைவர் மோகனாகுமார், தொல்காப்பியர் அறக்கட்டளை செயலாளர் பேராசிரியர் செ.சஜீவ், அதங்கோட்டாசான் அறக்கட்டளை தலைவர் புலவர் கொ. கோவிந்தநாதன், கேப்டன்பெனட்சிங், முனைவர் இலட்சுமனன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் தூய்மை பணிகளை ஆட்சியர் ஆய்வு



**திருவண்ணாமலை, மே 13-**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரிவலப்பாதையில் தூய்மை பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் அருணாச்சலேசுவரர் கோயில் சித்ரா பௌர்ணமி நிறைவடைந்ததையொட்டி கிரிவலப்பாதையில் தூய்மை பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் சித்ராபௌர்ணமி முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பாக பக்தர்களுக்கு பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி நேற்றைய தினம் சித்ரா பௌர்ணமி நிறைவடைந்ததையொட்டி திருவண்ணாமலை மாநகராட்சி மற்றும் கிரிவலப்பாதை ஆகிய பகுதிகளில் தூய்மை பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் இந்தப் பணியில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையை சேர்ந்த 1200 தூய்மை பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போதுவரை 260 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும் உள் மக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாதவகையில் தூய்மை பணிகளை விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி ஆணையருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் செல்வபாலாஜி, திருவண்ணாமலை வட்டாட்சியர் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திமுக சாதனை விளக்க பொதுக்கூட்டம்




**தென்காசி, மே 13-**

தென்காசி தெற்கு மாவட்டம் கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய திமுக செயலாளர் ஆ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

தலைமை கழக பேச்சாளர் சுபாஷ் சந்திர போஸ், மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி ஆகியோர் சிறப்புரையாற்றினார்சுள். ஒன்றிய அவைத் தலைவர் பக்கீர் மைதீன், ஒன்றிய துணை செயலாளர்கள் வின்சென்ட், முல்லையப்பன், பொருளாளர் சுடலைமுத்து, மாவட்ட பிரதிநிதிகள் பெருமாள், முகமதியாக, பகுத்தறி பேரவை துணை அமைப்பாளர் அண்ணா தாசன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கருணாநிதி, மாவட்ட துணை அமைப்பாளர் சுந்தரி மாரியப்பன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் விஜயேந்திரன், துணை அமைப்பாளர் அந்தோணி தாமஸ், ரவீந்திரநாத், சதாம், உசேன், ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள் புஷ்பராணி, அனுராதா பிரபா, அணி அமைப்பாளர்கள் புகாரி, மீரா, சாகிப், ஜஹாங்கீர், வன்னியன் துறை முருகன், ஜெகதீஷ், மூர்த்தி, சுந்தரம், கிருஷ்ணன், அலி, சுரேஷ், பேரூர் செயலாளர் அழகேசன், மாரியப்பன், தங்கராஜ், செண்பகராமன், காதர், ராஜன், செயலாளர் அந்தோணி சாமி, ஆரோக்கியராஜ், கதிரேசன், திருமலை குமார், முனீஸ்வரன், ஜெபசி ராஜன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்,

# விழுப்புரத்தில் மிஸ் கூவாகம் திருநெல்வேலி அஞ்சனாவுக்கு முதல் பரிசு



**விழுப்புரம், மே 13-**

விழுப்புரம் கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவாகம் கூத்தாண்டவர் கோயில் திருவிழாவையொட்டி, தென்னிந்திய திருநங்கையர் கூட்டமைப்பு, தமிழக அரசின் சமூக நலத் துறை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் ஆகியவை இணைந்து இந்த அழகிப் போட்டியை நடத்தின.

அழகிப் போட்டிக்கான முதல் மற்றும் இரண்டாம் சுற்று விழுப்புரம் கே.கே. சாலையிலுள்ள திருமண மண்டபத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. முதல் மற்றும் இரண்டாம் சுற்றின் முடிவில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 26 திருநங்கைகள் பங்கேற்றனர். இவர்களிலிருந்து 15 பேர் மூன்றாம் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து விழுப்புரம்புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள நகராட்சித் திடல் பகுதியில் திங்கள்கிழமை இரவு அழகிப் போட்டிக்கான மூன்றாம் கட்டச் சுற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற 15 பேரிலிருந்து 7 பேர் இறுதிச்சுற்றுக்குத் தேர்வாகினர். முன்னதாக 15 பேரும் மேடையில் ஒய்யாரமாக நடந்து வந்து தங்களது அழகை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து இறுதிச்சுற்றுக்கு கள்ளக்குறிச்சி அஞ்ஜனா, ஈரோடு சனா, திருநெல்வேலி ரேணுகா, கோவை ஆஸ்திகா, வேலூர் மிருதுளா, சென்னை யுவன்யா, தருமபுரி அனு ஆகிய7 பேர் தேர்வாகினர். இதைத் தொடர்ந்து இவர்கள் ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்கள் கேள்வி கேட்டனர். அதற்கு சம்பந்தப்பட்ட திருநங்கைகள் பதிலளித்தனர்.

இதைத் தொடர்ந்து கேள்விக்குரிய பதில் அளித்த விதம், ஒப்பனை, நடை போன்றவற்றின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் அறிவிக்கப்பட்டனர். அதன்படி திருநெல்வேலியைச் சேர்ந்த ரேணுகா மிஸ் கூவாகம் 2025 பட்டத்தை வென்றார். கள்ளக்குறிச்சி அஞ்ஜனா இரண்டாவது இடத்தையும், கோவை ஆஸ்திகா மூன்றாவது இடத்தையும் பெற்றனர். முதல் பரிசு பெற்றவருக்கு ரூ.50 ஆயிரம், இரண்டாமிடத்தை பெற்றவருக்கு ரூ.25 ஆயிரம், மூன்றாமிடத்தை பெற்றவருக்கு ரூ.11 ஆயிரம் பரிசுத் தொகையை வழங்கப்பட்டது.

இவர்களுக்கு தென்னிந்திய திருநங்கையர் கூட்டமைப்பின் தலைவர் பி.மோகனாம்பாள், தலைமை ஒருங்கிணைப்பாளர் கே. அருணா, செயலர் ஆர். கங்கா, பொருளாளர் வி.சோனியா உள்ளிட்ட நிர்வாகிகள் கிரீடத்தை சூட்டி, பரிசுத் தொகைகளை வழங்கினர். இந்த நிகழ்வில்திரைப்பட நடிகை வனிதா விஜயகுமார், சின்னத்திரை நடிகை தேவிபிரியா உள்ளிட்டோர் பங்கேற்று திருநங்கைகளை வாழ்த்திப் பேசினர். முன்னதாக, சிறந்த இளம் திருநங்கையர், திருநம்பி என தேர்வு செய்யப்பட்ட 7 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

திருநங்கைகள் தேசிய கவுன்சில் உறுப்பினர் ந.ராமமூர்த்தி, ஏஆர்எம் தொண்டு நிறுவன நிர்வாக இயக்குநர் பக்தவத்சலம் உள்ளிட்டோர் பேசினர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மட்டுமல்லாது, வெளி மாநிலங்கள், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடியில் நலத்திட்ட உதவி சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்




**நெல்லை, மே 13-**

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்டஉதவிகள் வழங்கும் விழாவில் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, துணை மேயர் ராஜூ, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை சார்பில் 02 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளும், 216 பயனாளிகளுக்கு ரூ.3.86 கோடி மதிப்பிலான வரன்முறை படுத்தப்பட்ட வீட்டு மனை பட்டாக்களும், வேளாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.3,014 மதிப்பிலான விதைகளும், கூட்டுறவுத்துறை சார்பில், 259 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவை கடன், சிறுகுறு தொழில் கடன், மகளிர் சுயஉதவிக்குழுகடன் ஆகிய கடன்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.15.75 லட்சம் மதிப்பிலான இணைப்புசக்கர பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்களும், மாநகராட்சி சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.14 கோடி மதிப்பிலான ஜே.சி.பி இயந்திரங்களும், குறு,சிறு மற்றும் நடுத்தரதொழில் நிறுவனம் சார்பில் பாய் நெசவுமற்றும் சேலைநெசவுதொழில்கள் செய்வதற்கு 5 பயனாளிகளுக்கு ரூ.3.20 லட்சம் மதிப்பிலானகடன் உதவிகளும் என மொத்தம் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர், அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொற்கால ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புறத்தில் நீண்டநாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுமென அரசாணை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சிகாலத்தில் அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்பாக சிறப்பு அனுமதி பெற்று திருச்சி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இன்று 20 ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு முதலமைச்சர் பொற்கால ஆட்சியில் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டி நீண்டகாலமாக நகர்புறத்தில் இருக்கிற மக்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று ஒரு தனிதீர்மானம் போட்டு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி அரசாணையாக வெளியிட்டார்கள்.

அதன் பிரகாரம் இன்று நகர்ப்புறங்களில் நீண்டகாலம் வசிப்பவர்களுக்கு இரண்டு சென்ட் பட்டா வழங்கே வண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபாய் 5 லட்சத்திற்கும் குறைவான மதிப்பு உள்ள நிலங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதிபெற்று பட்டா வழங்கலாம். ரூபாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மனைகளுக்கு சென்னையில் உள்ள வருவாய்த்துறை செயலாளரிடம் அனுமதி பெற்று வழங்கப்படும்.

நீண்டநாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டாவழங்க வேண்டுமென தமிழ்நாடு முதல் அமைச்சர் உத்தரவிட்டார்கள். அதன்படி சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் கண்டிப்பாக பட்டா வழங்கப்படும். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எந்தவித தடையும் இல்லாமல் பட்டா வழங்க உத்தரவிடப்பட்டு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வருவாய்த்துறை அமைச்சருக்கு 10 லட்சம் பட்டா வழங்க வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. என தெரிவித்தார்கள்.

முன்னதாக, பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர் கிராமம் ரெட்டியார்பட்டி பொருநை அருங்காட்சியகம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் திருக்கரங்களால் திறப்பதற்கான பணிகளை விரைந்து முடிக்கவேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, பாளையங்கோட்டை சீனிவாசநகர் சரண்யாயூங்காநகர் பகுதியில் பாதாளசாக்கடை திட்டம் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பாளையங்கோட்டை முருகன் குறிச்சி பகுதியில் நெடுஞ்சாலைதுறையின் சார்பில் முருகன்குறிச்சி முதல் மகளிர்காவல் நிலையம் வரை 1.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலையினை 07 மீட்டர் அகலத்தில் இருந்து 10 மீட்டராக அகலப்படுத்தி மூன்று சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 4 கோடிமதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுவருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பணிகள் அனைத்தும் இந்தமாத இறுதியில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவதற்கான நடவடிக்கை எடுக்கே வண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மாசுகன்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் முருகேசன், செயற்பொறியாளர்கள் பாண்டியராஜன், ஜோசப் ரன்சட் பெரிஸ், ஸ்ரீராம், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# IPL 2025: Tournament resumes on May 17 with final slated for June 3

New Delhi, May 13-

The Indian Premier League is all set to resume on May 17 with the final to be played on June 3, the Board of Control for Cricket in India (BCCI) announced on Monday. The IPL, which was suspended last Friday following hostilities between India and Pakistan, will now take place at six venues with those for the play-offs still to be decided.

Ever since India and Pakistan announced a ceasefire, the BCCI has been in a huddle to restart the league. After consultation with the government, the Board released the revised schedule which sees the tournament resuming in Bengaluru on Saturday with Royal Challengers Bengaluru taking on Kolkata Knight Riders. It will be followed by a double header on Sunday in Jaipur and Delhi as Rajasthan Royals take on Punjab Kings in the afternoon, followed by the evening clash between Delhi Capitals and Gujarat Titans.

Apart from these three venues, Lucknow, Ahmedabad and Mumbai will see the remaining league fixtures being played. The Punjab Kings vs Delhi Capitals match, which was called-off mid-way on May 8, would now take place in Jaipur on May 24.

One of the options available to the BCCI as it finalised the revised schedule was to keep all the remaining matches in Chennai, Bengaluru and Hyderabad, far from the Pakistan border and the Line of Control. However, Chennai and Hyderabad won't witness any more action in the league stages, and it remains to be seen whether they get any play-off fixtures. Kolkata also misses out with sources in the BCCI saying a forecast of rain in the coming days was the primary reason.

Among the teams in play-off contention, the only team that will lose out on home advantage in the revised schedule is Punjab Kings. The franchise was supposed to play two of its remaining home matches (including the called-off one vs Delhi Capitals) at Dharamsala. Instead, they will now play both those games at the Sawai Man Singh Stadium in Jaipur.




Security personnel guarding at the HPCA Stadium on the eve of the IPL Match between Punjab KIngs and Delhi Capitals at Dharamshala in Himachal Pradesh on Wednesday. Express Photo by Rohit Jain Paras

While the initial plan was to finish the IPL by May 31, the BCCI has now extended it by three days with the final now slated for June 3. It is understood that with the summer picking up, the BCCI wasn't keen on more double-headers as it would have increased the workload of the players. There are only two double-headers (May 18 and May 25) on successive Sundays.

There are other minor tweaks as well, where Royal Challengers Bengaluru, which were set to finish their league campaign at home will now play their last game at the Ekana Stadium against Lucknow Super Giants. With regards to the play-offs and final which Hyderabad and Kolkata were originally scheduled to host, sources in the board revealed that they are not ruled out, and a final call would be taken in the coming days. In case both are ruled out, Ahmedabad stands a strong chance to host the four games, but sources revealed that another venue could share the load.

Last Thursday, despite the rising tensions, the IPL went ahead with a game in Dharamsala before the match was called off mid-way. Around the same time, there was a total blackout in Pathankot – only 80km away – because of a drone strike. Following a phone call from a top BCCI official, the match was called off and on Friday, the BCCI officially suspended the league for a week. But after the ceasefire was announced on Saturday, the Board asked the franchises to assemble back their players by Tuesday. Gujarat Titans and Mumbai Indians have already resumed training with the other teams expected to begin by Wednesday.

With a majority of the overseas players already back in their respective countries, franchises have expressed concerns about their availability. Whether all of them will rejoin the squads remains the big question among the franchises. There are indications that Australia pacers Josh Hazlewood and Mitchell Starc may not rejoin RCB and Delhi Capitals for the remaining matches because of niggles. The duo are in line to play the World Test Championship final against South Africa beginning June 11.

IPL 2025 revised schedule: May 17, 2025 – 7:30 PM IST – Royal Challengers Bengaluru vs Kolkata Knight Riders, Bengaluru. May 18 – 3:30 PM IST – Rajasthan Royals vs Punjab Kings, Jaipur. May 18 – 7:30 PM IST – Delhi Capitals vs Gujarat Titans, Delhi. May 19 – 7:30 PM IST – Lucknow Super Giants vs Sunrisers Hyderabad, Lucknow. May 20 – 7:30 PM IST – Chennai Super Kings vs Rajasthan Royals, Delhi. May 21 – 7:30 PM IST – Mumbai Indians vs Delhi Capitals, Mumbai. May 22 – 7:30 PM IST – Gujarat Titans vs Lucknow Super Giants, Ahmedabad. May 23 – 7:30 PM IST – Royal Challengers Bengaluru vs SunRisers Hyderabad – Bengaluru. May 24 – 7:30 PM IST – Punjab Kings vs Delhi Capitals, Jaipur. May 25 – 3:30 PM IST – Gujarat Titans vs Chennai Super Kings, Ahmedabad. May 25 – 7:30 PM IST – Sunrisers Hyderabad vs Kolkata Knight Riders, Delhi. May 26 – 7:30 PM IST – Punjab Kings vs Mumbai Indians. May 27 – 7:30 PM IST – Lucknow Super Giants vs Royal Challengers Bengaluru.

IPL 2025 Playoffs schedule: May 29 – 7:30 PM IST – Qualifier 1, May 30 – 7:30 PM IST – Eliminator, June 1 – 7:30 PM IST – Qualifier 2, June 3 – 7:30 PM IST – Final.

# திருக்காஞ்சியில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் சிவன் கோயிலுக்கு காசியில் இருந்து வந்த 108 பானலிங்கம்: முதலமைச்சர், சபாநாயகர், அமைச்சர் வரவேற்பு



புதுச்சேரி, மே 13–

புதுச்சேரி திருக்காஞ்சி கங்கைவராக நதீஸ்வரர் கோவிலில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வரும் சிவன் கோயிலுக்கு காசியில் இருந்து வந்த 108 பானலிங்கங்களுக்கு முதலமைச்சர் ரங்கசாமி மலர் தூவி பூரண கும்ப வரவேற்பு அளித்தார்.

திருக்காஞ்சியில் வரலாற்று சிறப்புமிக்க கங்கைவராக நதீஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் வளாகத்தில் சித்தர்களின் ஜீவ சமாதிகள் உள்ளன. அந்தப் பகுதியில் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் 108 அடி உயரம் கொண்ட சதாசிவர் கோவில் கட்டப்பட்டு வருகிறது.

இதில் முதல் தளத்தில் 27 நட்சத்திரங்களுக்கு உண்டான சிலைகள் மற்றும் அந்த நட்சத்திரங்களுக்கு நான்கு லிங்கங்கள் வீதம் 108 லிங்கங்கள் அந்த கோவிலில் அமைப்பதற்கு காசியில் இருந்து உளி படாத 108 பானலிங்கங்கள் ரெயில் மூலம் சென்னை கொண்டுவரப்பட்டு, பின்னர் மாமல்லபுரம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு 108 லிங்கங்களுக்கும் அடிபீடங்கள் செய்யும் பணி நடைபெற்றது.

இந்நிலையில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு 108 லிங்கங்கள் மற்றும் அடிபீடங்கள் இரண்டு சகடைகள் மூலம் நேற்று புதுவைக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. மாநில நுழைவு வாயிலான கோரிமேடு எல்லையில் இந்த பானலிங்கங்கள் நேற்று வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து சிவனடியார்கள் திருவாசகம் படித்து, ஓம் சிவாய நம என்ற சிவ ஒளி எழுப்பினர். இதனை அடுத்து சபாநாயகர் செல்வம், அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் முன்னிலையில், முதலமைச்சர் ரங்கசாமி 108 பான லிங்கங்களுக்கு மலர் தூவி பூரணக் கும்பம் மரியாதை செலுத்தி மாலை 5:30 மணி அளவில் வரவேற்பு அளித்தார். பின்னர், தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கே.எஸ்.பி.ரமேஷ் எம்.எல்.ஏ., திருவண்ணாமலை நால்வர் மடத்திலிருந்து யோகா பயிற்சியாளர் கஜேந்திர சுவாமிகள் உட்பட சிவனடியார் கூட்டம், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

அதனை தொடர்ந்து வாகனங்களில் 108 பானலிங்கங்கள் ஊர்வலமாக ராஜிவ் காந்தி மற்றும் இந்திரா காந்தி சிலை சதுக்கம் வழியாக மூலக்குளம் சென்று திருக்காஞ்சிக்கு கொண்டு செல்லப்பட்டது. தொடர்ந்து கங்கைவராக நதீஸ்வரர் கோவிலில் பானலிங்கங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை சதாசிவா ட்ரஸ்ட் நிர்வாகிகள், சிவனடியார்கள் செய்திருந்தனர்.

# கொத்தமங்கலம் மாரியம்மன் கோவிலில் 18ம் தேதி காப்புகட்டும் விழா



புதுக்கோட்டை, மே 13–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கொத்தமங்கலம் ஊர் பொதுமக்களால் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் பூ தட்டு விழா, காப்பு கட்டு விழா வரும் 18ம் தேதி நடைபெறுகிறது. தொடர்ந்து தேரோட்ட திருவிழா, மஞ்சள் நீராட்டு விழா, புஷ்ப பல்லாக்கு விழா, தெப்பத் திருவிழா நடைபெறும் என்று ஊர் பொதுமக்களால் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கோவில் வளாகத்துக்குள் டிஜிட்டல் போர்டு தனிப்பட்ட நபரோ கோவில் நிர்வாகமும் யாரும் வைக்க கூடாது என்று தீர்மானம் எழுதப்பட்டது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



புதுக்கோட்டை, மே 13–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு உதவி உபகரணங்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷோபா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# பொதுமக்களிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

# ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் 9 வழித்தடங்களில் 6 புதிய பேருந்துகள் இயக்கம்

## அமைச்சர் சக்கரபாணி தொடங்கி வைத்தார்




திண்டுக்கல், மே 13–

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் 9 வழித்தடங்களில் 6 புதிய பேருந்துகள் இயக்கத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அறிவிக்காத பல அறிவிப்புகளை அறிவித்து, அத்திட்டங்கள் பலன்கள் அனைத்தையும் கிராமப்புறத்தில் வாழும் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைகின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தனியார் பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வந்த நிலையில், பேருந்துகள் இயக்கத்தை அரசுடைமையாக்கப்பட்டது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில்தான். மேலும், 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர், அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்தினை மேம்படுத்திடவும், பொதுமக்கள் பேருந்து பயணத்தினை அதிகம் பயன்படுத்தவும், சாலை போக்குவரத்தினை மேம்படுத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையில் பயணம் செய்வதற்காகவும் புதிய பேருந்துகளை கொள் முதல் செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கியுள்ளார்கள்.அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், ஒட்டன்சத்திரம் போக்குவரத்துக் கிளை சார்பில் புதிய மலைப்பகுதிக்கான பேருந்து ஒட்டன்சத்திரம் பாச்சலூர் கேசி பட்டி (வழிவடகாடு, கண்ணனூர், பாச்சலூர்), புதிய நகரப்பேருந்துகள் ஒட்டன்சத்திரம் பொருளூர் (வழி அம்பிளிக்கை, கப்பல்பட்டி, பொட்டிக்காம்பட்டி, தேவத்தூர், கொத்தையம்), பழனி கொத்தையம் (வழி மாட்டுப்பாதை, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர்) மற்றும் ஒட்டன்சத்திரம் பழனி (வழிவிருப்பாட்சி, சத்திரப்பட்டி, மாட்டுப்பாதை, கண்க்கன்பட்டி) ஆகிய வழித்தடங் களிலும், பழனி போக்குவரத்துக் கிளை சார்பில் பழனி வேப்பன்வலசு (வழி டி.கே.என்.புதூர், ரூக்குவார்பட்டி, அமரபூண்டி), பழனி தீத்தாகவுண்டன்வலசு (வழி அமரபூண்டி, ரூக்குவார்பட்டி, வேப்பன்வலசு, ஜே ஆர்சி பள்ளி), பழனி தொப்பம்பட்டி (வழி வண்ணாபட்டி, வில்வாதம்பட்டி, ஆலாவலசு, சரவணம்பட்டி), பழனி பூசாரிகவுண்டன் வலசு (வழி ஆலாவலசு, சரவணம்பட்டி, தொப்பம்பட்டி) மற்றும் நத்தம் போக்குவரத்துக் கிளை சார்பில் நத்தம் சிலுவத்தூர் (வழி உலுப்பக்குடி, கோபால்பட்டி, வி.குரும்பப்பட்டி, மருநூத்து, வி.மேட்டுப்பட்டி, அதிகாரிப்பட்டி) என 9 வழித்தடங்களில் 6 புதிய பேருந்துகள் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தற்போது வரை சுமார் 1.16 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள நபர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (தமிழ் வழிக்கல்வி) படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'புதுமைப் பெண்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 லட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இதேபோல் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆகமொத்தம் தமிழ்நாட்டில் உயர் கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை 54 சதவீதம் உயர்ந்துள்ளது.

நான் முதல்வன் திட்டத்தில் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தற்போது யுபிஎஸ்சி தேர்ச்சி பெற்ற 55 பேரில் 50 பேர் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் இதுவரை 20.00 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த 48 மாதங்களில் 2,600 நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 260 கடைகள் பிரிக்கப்பட்டு, புதிய கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 86 புதிய கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் விவசாயிகளை மேம்படுத்துவதற் காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2 லட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்க அறிவிக்கப்பட்டதில், இதுவரை 1.70 லட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சுமார் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றிய சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதியோருக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 லிருந்து ரூ.1,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் ரூ.1400 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டன்சத்திரம் கள்ளிமந்தையத்தில் உயர்கல்வித்துறை சார்பில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. அம்பிளிக்கையில் பெண்கள் மட்டும் படிக்கும் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிக்கு ஒட்டன்சத்திரத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாட்டில் 5 இடங்களில் மாணவிகளுக்கான விடுதி அமைக்கப்படவுள்ளது. அதில் ஒன்று ஒட்டன்சத்திரத்தில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கேதையறும்பு மற்றும் ஒட்டன்சத்திரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைக்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8 லட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, கடந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன. ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்திலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரத்தில் 450 வீடுகளுடன் அடுக்குமாடி குடியிருப்பு, கீரனூர் 432 வீடுகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு பொருளாதாரத்தில் 9.69 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக உள்ளது.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டும், என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டல பொதுமேலாளர் ஏ. முத்துக்கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITTITU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007